மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாதிரிப் பள்ளிகள் என்பது வேறு, 'கம்ப்ரெஹென்ஸிவ்' பள்ளிகள் என்பது வேறு. மாதிரிப் பள்ளிகள் என்பவை சென்ற ஆண்டிலேதான் தொடங்கப்பட்டன. 'காம்ப்ரெஹென்ஸிவ் ஸ்கூல்ஸ்' என்பவை இந்த ஆண்டிலிருந்துதான் துவங்கப்படும்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவரவர்களே, உதகமண்டலத்திலே லாரென்ஸ் பள்ளிக்கூடம் என்று ஒரு பள்ளிக்கூடம் இருப்பது அனைவருக்கும் தெரிந்திருக்கலாம். அதிலே பணியாற்றி ஓய்வு பெற்ற தாமஸ் என்பவர் இந்த ஊரில் ஒரு பள்ளிக்கூடத்தை நடத்தி வருகின்றார். அது பப்ளிக் ஸ்கூல் என்று சொல்லப்படுகிறது. அந்தப் பள்ளிக்கூடப் பாடத் திட்டங்களுக்கும் மாடல் ஸ்கூல் பாடத் திட்டங்களுக்கும் என்ன வித்தியாசம் இருக்கின்றது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது பற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. இவை தனி ஸிலபஸ்களின்கீழ் ஆரம்பித்து, மெட்ரிகுலேஷன் என்ற அளவிற்குப் போகின்றது. ஆங்கிலத்திலே பாட போதனை நடத்துகின்றார்கள். நாம் வைக்கும் காம்ப்ரெஹென்ஸிவ் ஸ்கூலில் தொழில் நுட்ப அறிவையும், 'ஜாப் ஓரியெண்டேஷன்' என்று சொல்லத்தக்க அளவிலே, அதையும் புகுத்தி அவை ஒரு எடுத்துக்காட்டாக இயங்கத்தக்க அளவிற்கு அமைய இருக்கின்றன.

Narcotic Drugs

* 246 *Q.*—THIRU M. ARUMUGASWAMI (ON BEHALF OF THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Health be pleased to state the steps that are being taken by the Government to prevent the misuse of Narcotic Drugs by the public ?

போதையூட்டக்கூடிய மருந்துப்பொருள்கள்

திரு. எம். ஆறுமுகசாமி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

போதையூட்டக்கூடிய மருந்துப் பொருள்கள் பொதுமக்களால் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் யாவை ?

1974 மார்ச் 29]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தயாரிக்கப்பட்ட அபின் (போதையூட்டும் மருந்துகள்) நீங்கலாக ஏனைய மருந்துகளைத் தயாரித்தல், விற்பனை செய்தல், ஏற்றுமதி செய்தல், இறக்குமதி செய்தல், எடுத்துச் செல்லுதல், வைத்திருத்தல் ஆகியவை அபாயகரமான மருந்துகள் சட்டத்தைச் சேர்ந்த (மத்திய சட்டம் 1930) 8-வது பிரிவின் கீழ் இயற்றப்பட்ட தமிழ் நாடு 1932 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட மருந்துகள் விதிகளின் கீழ் முறைப்படுத்தப்படுகின்றன. இவ் விதிகளை மீறுபவர்கள் தகுந்தவாறு தண்டிக்கப்படுகின்றனர்.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know whether any report has been received by Government regarding the use of Narcotic Drugs in Students' Hostels in Tamil Nadu ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அப்படிப்பட்டதொரு அறிக்கை எதுவும் இதுவரையில் வந்ததாகத் தெரியவில்லை.

New water supply scheme in Poonamallee

* 247 Q.—THIRU L. BALARAMAN (ON BEHALF OF THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether any new water-supply scheme has been introduced in Poonamallee during 1973 ; and

(*b*) if so, the details thereof?

பூவிருந்தவல்லியில் புதிய நீர் வழங்குத் திட்டம்

திரு. எல். பலராமன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1973-ஆம் ஆண்டில், பூவிருந்தவல்லியில், புதிய நீர் வழங்குத் திட்டம் ஏதும் கொண்டுவரப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம். பூவிருந்தவல்லி பேரூராட்சிப் பகுதிக்காக, புதியதொரு குடி நீர் வழங்கு திட்டத்தை நிறைவேற்ற அரசு 1972 மார்ச் திங்களில் நிர்வாக ஒப்புதல் வழங்கியது. அத்திட்டத்தை நிறை வேற்ற ரூ. 20.40 லட்சமும், அவற்றைப் பேணிவர ஆண்டுதோறும் ரூ. 50,000-ம் செலவாகும் என மதிப்பிடப்படுகிறது.